**செய்தி வெளியீடு எண்: 530** **நாள் : 20.10.2014**

**மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 20.10.2014 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டம்.**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் குறித்து 20.10.2014 அன்று காலை 11.00 மணியளவில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் வாரியத் தலைவர், அரசு முதன்மைச் செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் வாரியத்தின் அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவுகள் கீழ்வருமாறு:

1. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மழைக் காலங்களில் சென்னையில், சென்னை மாநகராட்சி, இதர மாவட்டங்களில், மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளாட்சித் துறையின் ஒத்துழைப்போடு தாழ்வான பகுதியிலும் குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளிலும் மழைநீர் தேங்கா வண்ணம் முன்னேற்பாடு நடவடிக்கை எடுக்கவும், தொடர் மழையால் மழைநீர் தேங்கியிருப்பின் அவற்றை உடனுக்குடன் வெளியேற்றி குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் வசிக்கும் மக்களுக்கு நடைமுறை வாழ்க்கை எந்தவிதத்திலும் பாதிக்காத வகையில் போர்கால நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.
2. வாரியத்தின் அதிகாரிகள் சிறப்பு முகாம்கள் அமைத்து 24 மணி நேரமும் மாற்று பணி அடிப்படையில் எந்தெந்த திட்டப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதோ அவைகள் நேரில் கள ஆய்வு செய்து உயரதிகாரிகளின் ஆலோசனை பெற்று மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்காதபடி தீவிர நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுரை வழங்கினார்.
3. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தில் நடைபெற்று வரும் பணிகளை வேகமாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுரை வழங்கினார்.
4. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை விரைவுபடுத்த அறிவுரை வழங்கினார்.

**மேலாண்மை இயக்குநர்.**
**தமிழ்நாடு குடிசைப்பகுதி**
**மாற்று வாரியம்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**